# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## சட்டமாணிப் பரீட்சை, வருடம் III - 2016/2017

### பகிரங்க சர்வதேசச் சட்டம்

(மூன்று மணித்தியாலங்கள்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

**நான்கு** வினாக்களுக்கு **மட்டும்** விடைதருக.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்)

1. "சட்டரீதியாகப் பிணிக்கின்ற பொருத்தனை ஒன்றின் பாகமாக வெறுமனே ஆக்குவதன் மூலம், ஒவ்வொரு சர்வதேச அநீதியும் சர்வதேசச் சட்டமாக மேலுயர்த்தப்பட முடியுமாயின், சர்வதேசச் சட்டமானது ஓர் அறவியல் ஒழுங்கு என்ற கருத்தானது வெறுமனே பொய்த்தோற்றம் ஒன்றென்றளவுக்குத் தாழ்த்தப்படமுடியுமாகும்."

   பகிரங்க சர்வதேசச் சட்டத்தின் தன்மை மற்றும் வரலாற்று ரீதியான வளர்ச்சி என்பவற்றின் பின்னணியில், அதன் படிமுறை வளர்ச்சியின்போது அது முகங்கொடுத்த சவால்களுடன் விசேடமாகத் தொடர்புபடுத்தி மேலுள்ள கூற்றினை நுணுக்கமாகப் மதிப்பீடு செய்க.

2. "1945ஆம் ஆண்டிலிருந்து அரசுகளின் எண்ணிக்கையில் கணிசமானதொரு அதிகரிப்பு ஏற்பட்டிருக்கின்றது; அத்துடன் ஏனைய சர்வதேச செயற்பாட்டாளர்களும் தோன்றத் தொடங்கியுள்ளனர். ஓர் அமைப்பானது சர்வதேச சமூகத்தினது அங்கத்தவரொருவராகக் கருதப்படுதலையும், சர்வதேசச் சட்டத்தினால் ஆளப்படுவதனையும் தீர்மானிக்கின்ற கோட்பாடுகளும் நடைமுறைகளும் காலவோட்டத்தில் குறிப்பிடத்தக்களவு மாற்றமடைந்துள்ளன."

   மேலுள்ள கூற்றை நுணுக்கமாக ஆய்ந்துரைக்க. உமது விடையானது பொருத்தமான உதாரணங்களால் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

3. "சர்வதேசச் சட்டத்திற்கும் உள்நாட்டுச் சட்டத்திற்குமிடையிலான உறவுமுறை தொடர்பான சட்டக்கோட்பாடுகள் இருப்பினும், அரசுகளுக்குள்ளே உண்மையில் நிகழ்வது என்ன என்பது, குறிப்பிட்ட ஏதேனும் கோட்பாட்டுக்கான விசுவாசமிக்க கடைப்பிடிப்பைவிட, நடைமுறை வசதியிலும் அரசியல்சார் விருப்பின் மீதுமே பெரும்பாலும் தங்கியுள்ளது."

   தெரிவுசெய்யப்பட்ட நியாயாதிக்கங்களில் உருவாகிவளர்ந்துவருகின்ற செல்நெறிகள் தொடர்பாக பொருத்தமான அதிகார ஆதாரங்களைச் சுட்டிகாட்டுவதுடன் உதாரணங்களையும் தந்து மேலுள்ள கூற்றினை நுணுக்கமாக ஆராய்க.

4. **(அ)** மற்றும் **(ஆ)** ஆகிய **இரண்டிற்கும்** விடை தருக.

(அ) தீனாலாந்து என்ற நாட்டில் பெரிக்கா என்ற அரசின் பிரசையான கென் என்பவன் வாழ்ந்துவருகின்றான். பெரிக்கா நாட்டு சனாதிபதியை விமர்சித்து அவன் நூலொன்றை எழுதியிருந்ததன் காரணமாக அவனுக்கு விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல்கள் காரணமாக தன்னுடைய நாட்டைவிட்டு அவன் வெளியேறியிருந்தான். ஒரு நாள், தீனாலாந்துவினது வீதியோரமாக அவன் நடந்துசெல்கையில், ரோவின் என்பவனின் தாக்குதலுக்குள்ளாகி கொல்லப் படுகின்றான். அதன்பின்னர், ரோவினை பொலிஸார் கைதுசெய்வதுடன் அவன் லோவானிய என்ற நாட்டின் பிரசையொருவன் என்பதனையும் கண்டறிகின்றனர். தீனாலாந்துவிலுள்ள பெரிக்கா நாட்டின் பிரதித்தூதுவரான ஜென்னி என்பவளால் 'கென்'னை கொலை செய்வதற்காக அவன் கூலிக்கமர்த்தப் பட்டதாக ரோவின் கூறுகின்றான். தீனாலாந்துவினது பொலிஸாரினால் ஜென்னி கைதுசெய்து விசாரணை செய்துவருவதுடன், துன்புறுத்தும்படியாக பொலிஸார் நடாத்துவதாகவும் அவள் முறைப்பாடு செய்கின்றாள்.

(ஆ) பிராந்தியத்தின் முக்கிய மாநாடொன்றுக்காக பெரிக்கா நாட்டின் சனாதிபதி மிடில்ஸ்டான் என்ற நாட்டுக்கு பயணஞ்செய்கின்றார். அவருடைய ஹோட்டலுக்கு வெளியில் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒன்றுசேர்ந்ததுடன், பெரிக்கா நாட்டின் சனாதிபதிக்கு எதிராக 'கொலைகாரன்' என்று கோசமிடுவதுடன் பதாகைகளையும் ஏந்தியுள்ளனர். அக்குறித்த நாளில், ஆர்ப்பாட்டக்காரர்களை பெரிக்கா நாட்டு சனாதிபதி அருகில் நிற்கையில் அவருடைய மெய்ப்பாதுகாவலர்கள் கடுமையான காயங்களை எற்படுத்துகின்றதானளவுக்கு தாக்குவததையும் அடிப்பதனையும் ஒளிப்பதிவுகள் காட்டுகின்றன. மேலும், 'கென்'னைக் கொலை செய்வதற்கு சூழ்ச்சிசெய்தமைக்காக பெரிக்காவின் சனாதிபதிக்கு எதிராக சர்வதேச பிடிவிறாந்தொன்றையும் தீனாலாந்து அரசு பிறப்பித்துள்ளது. இந்த நிகழ்வுகள் இப்படியிருப்பினும், தன்னுடைய நாட்டில் மாநாட்டில் கலந்துகொண்டுள்ள பெரிக்கா வின் சனாதிபதியைக் கைதுசெய்வதற்கு மிடில்ஸ்டான் அரசாங்கமானது மறுப்புத் தெரிவிக்கின்றது.

ஏற்புடையதான சர்வதேசச் சட்டக் கோட்பாடுகளின் பின்னணியில் பெரிக்கா, லோவானியா, தீனாலாந்து மற்றும் மிடில்ஸ்டான் ஆகிய அரசுகளினது உரிமைகள் மற்றும் கடப்பாடுகளை நுணுக்கமாக ஆராய்க.

5. யோகா என்ற நாட்டில் பெரும்பான்மையாக சிரோமி என்பதும், சிறுபான்மைக் குழுக்களாக விரோகன் மற்றும் நைலாகன் ஆகிய இனக்குகுழுக்கள் காணப்படுகின்றன. யோகாவினது தென் பிராந்தியத்தில் செறிவாக வாழுகின்ற விரோகன்கள் தனியான அரசொன்றைத் தாபிக்க முயற்சிசெய்வதுடன், அயல்நாடுகள் அனைத்தினதும் ஆதரவினையும் கோரியுள்ளனர். அயல்நாடுகளிலொன்றான அம்ரானியா, விரோகன்களுக்கு ஆதரவு வழங்கும் தனது விருப்பார்வத்தைத் தெரியப்படுத்துகின்றது. 2016இல், யோகாவினது தென் பாகமானது விரோகன்களது கட்டுப்பாட்டிற்குள் வருவதுடன், புதியதொரு ஆட்சியும் நிலைநாட்டப்படுகின்றது. புதியதொரு விரோகன் அரச ஆள்புலத்தை அம்ரானியா அங்கீகரிப்பதுடன், இருதரப்பு உறவையும் தோற்றுவித்து, அமரானியாவினது புதிய தூதுவராலயம் ஒன்றையும் தாபிப்பதற்கு எண்ணுகின்றது. விரோக்கனுடன் அம்ரானியா கொண்டுள்ள தொடர்ச்சியான ஆதரவு மற்றும் உறவு என்பன யோகாவுக்கு எரிச்சலை ஏற்படுத்துகின்றன. அம்ரானியவின் சொத்துக்கள் அனைத்தையும் முடக்குவதற்கும்,

யோகாவின் ஆள்புலத்திலுள்ள எல்லா அம்ரானியர்களையும் வெளியேற்றவும் இரண்டு நாடுகளுக்கிடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட பொருத்தனைகள் அனைத்தையும் அவமதிக்கவும் யோகா தீர்மானிக்கின்றது.

யோகாவுக்கும் அம்ரானியாவுக்கும் இடையிலான பிணக்கைத் தீர்த்துவைப்பதற்கு உளதான பல்வேறு வழிவகை மற்றும் வழிமுறைமைகள் என்பன தொடர்பான அபிப்பிராய பத்திரமொன்றை எழுதுக.

6. **ஒன்றில் (அ)** அல்லது **(ஆ)** வுக்கு விடை தருக.

(அ) நோர்த்லாந்து என்பது கனிமப்பொருட்களைச் செழிப்பாக கொண்டதும் ஊழலால் பீடிக்கப்பட்டதுமான ஒரு நாடாகும். சொக்கோலாந்து என்ற அரசின் அரசாங்கமானது பணத்தூய்தாக்கல் தொடர்பில் நோர்த்லாந்துவினது உப-சனாதிபதியான திரு. கோயோ என்பவரை விசாரணை செய்துகொண்டிருக்கின்றது. விசாரணையின் பாகமாக, சொக்கோலாந்திலுள்ள அவருடைய வங்கிக் கணக்குகளையும், நோர்த்லாந்துவிலிருந்து திருடப்பட்ட பொதுமக்கள் நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டது என்று தெரிவித்து, திரு. கோயோ தனது பயணங்களுக்காகப் பயன்படுத்துகின்ற 'நோர்த்ஸ்டார்' என்ற பெயருடைய சிறிய ஆடம்பர படகொன்றையும் அவர்கள் கையகப்படுத்துகின்றனர். ஏனைய நாடுகளுக்கு பெறுமதியான கனிமப்பொருட்களை ஏற்றுமதி செய்வதற்காக நோர்த்லாந்துவினால் தற்பொழுது பயன்படுத்தப்படுகின்ற 'நோர்த்போல்' என்றழைக்கப்படுகின்ற கப்பலொன்றையும் சொக்கோலாந்து கையகப்படுத்துகின்றது. சொக்கோலாந்துவினால் தமது ஆதனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக அதன் கடுமையான விசனத்தைத் தெரிவிப்பதுடன், அது சர்வதேச சட்டத்தின் மீறலொன்றாகும் என்றும் கோருகின்றது.

பொருத்தமான சர்வதேசச் சட்டக்கோட்பாடுகளின் வரலாற்று வளர்ச்சியுடன் விசேடமாகத் தொடர்புபடுத்தியும், பொருத்தமான சட்ட அதிகார ஆதாரங்களை மேற்கோள்காட்டியும் சொக்கோலாந்துவுக்கு ஆலோசனை கூறுக.

(ஆ) சுற்றுலாப் பயணியொருவனான பிரயாணஞ்செய்கின்ற கொரினா என்ற அரசின் பிரசையொருவனான திரு.ஒஸ்மன் என்பவனை வொன்டர்டான் என்ற அரசின் அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர். 2006-2016 ஆகிய காலப்பகுதியில் கொரினா அரசாங்கத்தில் உள்துறைக்கான அமைச்சராக திரு.ஒஸ்மன் இருந்தான். கொரினாவில் அரசியல் எதிர்ப்பாளர்களின் காணாமல்போகச் செய்யப்பட்டமைக்கும், கடுமையான வேலையில் ஈடுபடுமாறு கட்டாயப்படுத்துகின்ற தடுப்பு முகாம்களுக்குள் அரசியல் எதிர்ப்பாளர்களின் குடும்பத்தினரை கட்டாயப்படுத்தி அனுப்பி வைத்தமைக்கும் திரு.ஒஸ்மன் பொறுப்பு உடையவனானாவான் என்று தெரிவித்து, 'மதர்ஸ் ஒவ் கொரினா' என்றழைக்கப்படுகின்ற நிறுவனமொன்று செய்த முறைப்பாடே அவனுடைய கைதுக்கு அடிப்படையாக அமைந்தது. சர்வதேசச் சட்டத்தின்கீழ் அவனைக் கைதுசெய்யவோ வழக்குத்தொடுக்கவோ வொன்டர்ஸ்டான்ட்டுக்கு அதிகாரங் கிடையாதென்று திரு.ஒஸ்மன் நம்பிக்கை கொண்டுள்ளான்.

மேலுள்ள நிலைமைக்கு ஏற்புடையதான சர்வதேசச் சட்டக்கோட்பாடுகளை ஆராய்க. உமது விடையானது, பொருத்தமான அண்மைய சட்டவியலையும் பொருத்தமான உதாரணங்களையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

7. அரசொன்றினுடைய ஆள்புலத்திலுள்ள வெளிநாட்டவரைப் பாதுகாக்கின்ற வழிமுறையொன்றாக அரச பொறுப்புடைமைக் கோட்பாடு தோற்றம்பெற்றது. ஆனால், தனியார் செயற்பாட்டாளர்களினது குற்றமுறையான செயல்கள் அல்லது செய்யாமைகள் என்பவற்றுக்கான பொறுப்புடைமையினைச் சுமத்துவதன் மூலம் சர்வதேசச் சட்ட உருவரையின்கீழ் வேறுபட்ட தனியார் செயற்பாட்டாளர்களைக் கொண்டுவருவதற்கான பயனுடைய முறைமையொன்றாக இருப்பதனால் தற்காலப் பின்னணியில் அது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

அரச பொறுப்புடைமையின் வரலாற்று வளர்ச்சி மற்றும் சமகால சவால்களை எதிர்கொள்வதற்கு எவ்வாறு இக்கோட்பாடு பயன்படுத்தப்படுகின்றது என்பவற்றுடன் தொடர்புபடுத்தி மேலுள்ள கூற்றினை நுணுக்கமாகப் பகுத்தாராய்க.

***************